Food Lab - Ch. 32

பதிவஞ்சல் ஒப்புதல் அட்டையுடன்

**இயக்குநர், பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை, சென்னை – 6 அவர்களின் செயல்முறை ஆணை.**

**முன்னிலை: மருத்துவர். அ. சோமசுந்தரம், எம்டி., டிபிஎச்., எம்.ஏ.எஃப்.,**

ந.க.எண்.45290/ப.தொ.4/2019/இரு3 நாள் :27.10.2025.

06 NOV 2025

12228

பொருள்: பொதுசுகாதாரம் – பணியாளர்தொகுதி – தமிழ்நாடு அமைச்சுப்பணி – திரு.அ.ரமேஷ் த/பெ (அமரர்) திரு.ஆ.அர்ச்சுணன் – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறைப்படுத்துதல் – ஆணை பிறப்பித்தல் – தொடர்பாக.

1. அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ1) துறை, நாள்: 08.03.2023.
2. இவ்வலுவலக செயல்முறை ந.க.எண். 45290/ப.தொ.4/2019/இரு3, நாள்: 29.01.2024.
3. முதன்மை உணவுப்பகுப்பாய்வாளர், உணவு பகுப்பாய்வு கூடம், கிண்டி, சென்னை –32 அவர்களின் ந.க.எண். 652/ப.தொ./இ1/2024, நாள். 25.02.2025.

*******

**ஆணை:**

பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக திரு.ஆ.அர்ச்சுணன் என்பவர் பணியாற்றி வரும்போது 30.12.2006-ம் தேதியன்று பணியிடை மரணமடைந்தார். அவருடைய மகன் திரு.அ.ரமேஷ் என்பவர் பார்வை இரண்டில் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக உணவு பகுப்பாய்வு கூடம், கிண்டி, சென்னை–32 அலுவலகத்தில் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளார். அந்நியமன ஆணையின்படி இத்தனியர் அவ்வலுவலகத்தில் **05.02.2024 முற்பகல்** முதல் பணியில் இணைந்து பணிபுரிந்து வருகிறார். இத்தனியரின் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை அவர் பணியில் இணைந்த நாளான **05.02.2024 அன்று முற்பகல்** முதல் பணிவரன்முறைப்படுத்தப்பட வேண்டும்.

2. இந்நேர்வில் பார்வை ஒன்றில் காணும் அரசாணையில் வெளியிடப்பட்டுள்ள தமிழ்நாடு குடிமைப்பணிகள் (கருணை அடிப்படையில் பணிநியமனம்) விதிகள் 2023–ல் பத்தி எண். (16) –ல் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளரின் பணியினை சம்பந்தப்பட்ட நியமன அதிகாரி அவரளவிலேயே அப்பணியாளர் பணியில் சேர்ந்த நாளிலிருந்து ஒரு வருட காலத்திற்குள் விதிகளுக்குட்பட்டு பணிவரன்முறைப்படுத்த வேண்டும் என அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

Scanned with CamScanner

3. எனவே, இந்நேர்வில் கருணையடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.அ.ரமேஷ் என்பவரின் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை, அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன்மேம்பாட்டுத் (க்யூ1) துறை, நாள்: 08.03.2023, பத்தி எண்.16-ல் வழங்கப்பட்டுள்ள வழிமுறைகள் / விதிமுறைகளுக்குட்பட்டும் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டம் 2016-ல் (தமிழ்நாடு சட்டம் 14/2016) பிரிவு 28 (1) இன் படியும், அவர்பணியில் சேர்ந்த நாளான **05.02.2024 அன்று முற்பகல்** முதல் தமிழ்நாடு அமைச்சுப்பணியில், பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறையில் பணிவரன்முறைசெய்து ஆணையிடப்படுகிறது. இவ்வாறு தனியரின் தற்காலிக பணியினை அவர் இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாள் **05.02.2024 முற்பகல்** முதல் பணிவரன்முறை செய்வதால், ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் விதிகளின்படி அவற்றைப் பெற தனியர் தகுதியுடையவராகிறார்.

4) தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டம் 2016-ல் (தமிழ்நாடு சட்டம் 14/2016) பிரிவு 28 (1) இன்படி தனியர் இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் செய்யப்பட்ட **05.02.2024 முற்பகல்** முதல் மூன்றாண்டுகால தொடர்பணியில் இரண்டு ஆண்டுகள் தகுதிகாண்பருவ நிலையில் அமர்த்தப்படுகிறார்.

5) தனியர் அரசுப்பணியாளர் பயிற்சி நிலையம், பவானிசாகரில் அளிக்கப்படும் இளநிலை உதவியாளர்களுக்கான பயிற்சியினை தகுதிகாண்பருவம் முடிப்பதற்குள் முடித்திடல் வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறார்.

**அ. சோமசுந்தரம்,**
இயக்குநர்,
பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு
மருந்துத்துறை, சென்னை-6.

பெறுநர்
திரு.அ.ரமேஷ், இளநிலை உதவியாளர்,
உணவு பகுப்பாய்வு கூடம், கிண்டி, சென்னை-32.
(முதன்மை உணவுப்பகுப்பாய்வாளர், உணவு பகுப்பாய்வு
கூடம், கிண்டி, சென்னை -32 மூலமாக)

நகல்: முதன்மை உணவுப்பகுப்பாய்வாளர், உணவு பகுப்பாய்வு
கூடம், கிண்டி, சென்னை அலுவலகம்
(தனியரின் பணிவரன்முறை தொடர்பான உத்தரவினை
தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவினை மேற்கொள்ளுமாறு
கேட்டுக்கொள்ளப்படுகிறது . மேலும் தனியரின் கீழ்கண்ட அசல்
சான்றுகள் மற்றும் பணிப்பதிவேடு இத்துடன் இணைத்து
அனுப்பப்படுகிறது. அவற்றினைப் பெற்றுக்கொண்டமைக்கான
ஒப்புகையை அளிக்குமாறு முதன்மை உணவுப்பகுப்பாய்வாளர், உணவு
பகுப்பாய்வு கூடம், கிண்டி அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.)

-3

Scanned with CamScanner

1. பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் அசல் (வ.எண். 0208292)
2. பனிரெண்டாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் அசல் (வ.எண். 0872521)
3. மாற்றுச்சான்றிதழ் அசல் 375.
4. ஜாதி சான்றிதழ் அசல் 3138357.
5. சென்னை பல்கலைக்கழகம் அறிவியல் புலம் சான்றிதழ் அசல் 2409446.

நகல்: இவ்வலுவலக பணியாளர் தொகுதி 3 பிரிவு.
(மறைந்த அரசு ஊழியரான (அமரர்) திரு.ஆ.அர்ச்சுணன், அலுவலக உதவியாளர், இவ்வலுவலகம் ( 30.12.2006 அன்று பணியிடை மரணம்) என்பவரின் பணிப்பதிவேடு 3 தொகுதிகள் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. பணிப்பதிவேட்டினை பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகையினை அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.)

நகல்: இப்பிரிவு இருக்கை 4.
இருப்பு கோப்பு-1/உபரி -1.

//உண்மை நகல் உத்தரவின்படி அனுப்பப்படுகிறது//

தே.நி. கண்காணிப்பாளர்,
30/10/25

30/10/2025

Scanned with CamScanner